2021

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report



ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

வெகுசன ஊடக அமைச்சு

Ministry of Mass Media

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2021

வெகுசன ஊடக அமைச்சு

செலவினத் தலைப்பு இல : 105

2020.01.30 ஆம் திகதி பொது நிதித் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

உள்ளடக்கம்

	பக்கம்
அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	1 - 20
அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	21 - 41
அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	43 - 53
அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்	55 - 57
அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	59 - 63
அத்தியாயம் 06 – மனித வள விபரம்	65 - 69
அத்தியாயம் 07– இணக்க அறிக்கை	71 - 82

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

1.3. பிரதான செயற்பாடுகள்

1.4. நிறுவன விளக்கப்படம்

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் /நிதியங்கள்

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

அ) கருத்திட்டத்தின் பெயர்

ஆ) கொடை வழங்கும் முகவர் நிறுவனம்

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு

ஈ) கருத்திட்டக் காலம்

1.0 வெகுசன ஊடக அமைச்சு

1.1. அறிமுகம்

சிறந்த சமூகத்தின் முன்னோக்கிய பயணத்தின் போது மனித உறவுகள், நடத்தைசார் முடிவுகள், எண்ணப்பாடுகள் மற்றும் மக்கள் கருத்துக்கள் என்பவற்றுக்கு மிகவும் தாக்கம் செலுத்தும் காரணியாக ஊடகம் காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த தொழில்நுட்பத்தைக் கையாளும் போது பொறுப்புணர்வுடனுடனும் தரத்துடனும் சிறந்த ஊடகப் பயன்பாட்டைப் பேணி வரவேண்டியது அவசியமான விடயமாகும்.

இந்த அமைச்சு, வெகுசன ஊடகப் பாவனை தொடர்பிலான தேசிய தேவைப்பாட்டை அடையாளம் கண்டு அதற்குத் தேவையான உரிய பலத்தையும் உந்துசக்தியையும் வழங்கி "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் பாதையில் பயணிக்கின்றது.

21 ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு பேச்சு மற்றும் வெளியீட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஊடக நிறுவனங்கள் மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளுக்குத் தேவையான சுதந்திரமான சூழலை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

சிறந்த ஊடக கலாசாரமொன்றை இலங்கை ஊடகத் துறையில் கட்டியெழுப்புவதற்காக உயர் தொழில் நிபுணத்துவமுள்ள ஊடகவியலாளர்களை உருவாக்க வேண்டியது அத்தியவசியமான விடயமாகும். நவீன தொழில்நுட்பத்துடன் ஊடகத் துறையில் நிகழும் தொழில்நுட்ப பாவனைக்கு இசைவாக்கம் அடைவதற்கும் உலகளாவிய வளர்ச்சிப் போக்குடன் தேசிய மற்றும் சர்வதேச உறவுகள் விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களை அறிவூட்டுவதற்கும் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்ற வகையில் தொடர்பாடல் விடயத் துறையை மீளமைக்க வேண்டியுள்ளது.

இதனை யதார்த்தமாக்கும் வகையில் உயர் தொழில் திறன்களுடன் கூடிய ஊடகவியலாளர்களை உருவாக்கும் பொருட்டு சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக அரசாங்க அனுசரணையுடன் ஊடக உயர் கல்வி நிறுவனமொன்றை நிறுவவேண்டுமென கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வெகுசன ஊகப் பிரிவுடன் இணைந்த வகையில் "இலங்கைப் பட்டய ஊடகவியலாளர் நிறுவனம்" (Chartered Institute of Journalists – Sri Lanka) எனும் பெயரில் உயர் தொழில்நுட்ப நிறுவனமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.அவ்வாறே, தற்போதைய சூழலில் ஒழுக்க ரீதியான சுய கட்டுப்பாட்டுடன் ஊடக கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஊடகவியலாளர்களை உத்தேச உயர் கல்வி நிறுவனத்தினால் உருவாக்குவது பிரதான நோக்கமாகும்.

ஊடகவியலாளர்களுக்கென அறிமுகம் செய்யப்பட்டுள்ள "எசிதிசி" புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அவர்களது ஆய்வு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது.

பொதுமக்களை அறிவூட்டும் தேசியப் பொறுப்புக்கு பங்களிப்பை வழங்கவரும் நாடு பூராகவும் வியாபித்துள்ள அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் தமது ஊடகச் செயற்பாட்டை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் பாதுகாப்பும் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்படும் பாரதூரமான செயற்பாட்டைப் புரிந்துகொண்டுள்ள இந்த அமைச்சு அவர்களின் நலன்புரிக்காக "எசிதிசி" காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

தொலைக்காட்சியை டிஜிட்டல் மயப்படுத்தும் கருத்திட்டம் இற்றைக்கு ஒரு தசாப்த காலத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தொழில்நுட்ப சாத்தியவளம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் காரணமாக அது செயலற்றுள்ளது. இந்தக் கருத்திட்டம் 40 வருட தொலைக்காட்சிப் பயணப் பாதையில் சர்வதேச திருப்புமுனையாக இந்நாட்டின் ஒப்புமை (Analog) தொலைக்காட்சி ஒளிபரப்பு கட்டமைப்பை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கலுக்கு உட்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை (Digital Terrestrial Television Broadcasting - DTTB Project) 2021 டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்க முடியுமாகியது விசேட வெற்றியாகும். இந்தக் கருத்திட்டத்தின் மூலம் இலங்கையில் தொலைக்காட்சி நேயர்களின் கண்டுகளிப்புத்திறன் பாரிய மாற்றத்திற்கு உள்ளாகும் என்பது உறுதி.

தெளிவான ஊடக கொள்கையொன்று ஏதேனுமொரு சனநாயக சமூகத்தில் இருத்தல் வேண்டும். வெகுசன ஊடக மற்றும் தொடர்பாடல் துறையில் உலகளாவிய வளர்ச்சியை கருத்திற்கொண்டு இலங்கையின் ஊடக தரத்திற்காக காணப்படும் சட்ட விதிகள், சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் சமூக அடையாளத் துறைக்கு விசேட கவனத்தைச் செலுத்தி இலங்கையில் ஊடகக் கொள்கையொன்றை தயாரித்து அதனை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்திமைப்பதற்கும் அதற்கான கொள்கைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களுக்கு மற்றும் வெகுசன ஊடக நிறுவனங்களில் காணப்படும் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தியமைப்பதன் மூலம் அந்த நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் அந்த நிறுவனங்களை நிதி ரீதியில் ஸ்தீரத்தன்மையுள்ள நிறுவனங்களாக மாற்றியமைப்பதற்கும் முடியும்.

ஊடகத் துறையின் முன்னேற்றம் தங்கியிருப்பது சம்பிரதாயபூர்வமான ஊடக கலைக்கு அப்பால் பரந்துள்ள தகவல்களின் அடிப்படையிலான புதிய ஊடகப் பயணமொன்றை மேற்கொள்வதனாலாகும். சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகங்களின் பாவனைப் பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் தொடர்பாடல் உத்திகளை சமூகமயப்படுத்தும் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு இசைவாக்கம் அடைவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு அமைச்சின் பிரிவொன்றாக செயற்படும் தேசிய அபிவிருத்தி ஊடக நிறுவனத்தினால் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

பிரஜைகளுக்கு தகவல்களை அறிந்துகொள்வதற்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவது தற்போது சனநாயக வட்டத்திற்குள் இயங்கும் அனைத்து நாடுகளுக்கும் உள்ள பிரதான பொறுப்பாகும். அதற்கமைய, தகவல் அறியும் உறிமை பற்றிய ஆணைக்குழுவும் தனது நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் ஒரு சுதந்திரமான மற்றும் பொறுப்பு வாய்ந்த தரப்படுத்தப்பட்ட ஊடக பாரம்பரியத்திற்கு பங்களிப்புச் செய்துவருகின்றது. இலங்கை ஊடகங்கள் மத்தியில் இணக்கமான சூழலை உருவாக்குவதிலும் ஊடக கலாச்சாரத்தை மேம்படுத்துவதிலும் பொதுமக்களின் சரியான தகவல் மற்றும் அரசாங்க நோக்கை அறிந்துகொள்வதற்கான உரிமையை உறுதி செய்வதிலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.

வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப சூழலுக்கு ஏற்ப அரசாங்க அச்சகமானது தனது தொழில்நுட்பத் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. உலகளாவிய ரீதியில் அச்சிடும் துறையில் ஏற்பட்டுள்ள டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு இசைவுற்று இந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கு பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் காரணிகளை நன்கு புரிந்து கொண்டு அரசாங்க அச்சுத் திணைக்களமும் செயல்பட வேண்டியது அவசியமாகும். பாதுகாப்பு அச்சிடல் துறையில் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்தவும் உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு அச்சிடல் துறையில் பிரவேசிப்பதன் மூலம் திணைக்களத்தின் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்குத் தேவையான சூழல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அஞ்சல் அலுவலகங்களின் பரந்த வலையமைப்புடன் அஞ்சல் திணைக்களம் அதன் வருவாய்-செலவு இடைவெளியைக் குறைப்பதில் கவனம் செலுத்துகிறது. இதன் கீழ் புதிய வருமான ஆதாரங்களை அடையாளம் காண வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. அரசாங்க - தனியார் கூட்டுத் திட்டத்தின் கீழ் பல்நோக்கு கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் திணைக்களம் பிரவேசித்துள்ளது. இலங்கை தபால் சேவையானது தற்போதைய போட்டிச் சந்தை மற்றும் வேலைப்பழுமிக்க வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு புத்தாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தப்பட வேண்டியிருப்பதனால் அதற்கு ஏற்றவாறு தபால் முகாமைத்துவ முறையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டில் ஊடகத்துறையில் ஊடகங்களைக் கையாள்வதில் அரசாங்க ஊடகங்களுக்கு நேரடிப் பொறுப்பு உள்ளது. ஊடக மரபுகளைப் பேணி நாட்டு நலனுக்காக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்க ஊடகங்களுக்கு தவிர்க்க முடியாத பொறுப்பு உள்ளது.

அரசாங்க ஊடக நிறுவனங்கள் வர்த்தக ரீதியாக வெற்றிபெற வேண்டும். அரச ஊடகங்களில் ஆக்கத்திறன் மற்றும் போட்டித்திறன் வீழ்ச்சியடைந்து வருவதை உணர்ந்து, தற்போது நட்டத்தில் இயங்கி வரும் அரச ஊடக நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக மாற்ற ஆக்கபூர்வமான மற்றும் போட்டித் தன்மை கொண்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

அமைச்சின் கீழ் உள்ள அச்சு ஊடக நிறுவனமான அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் (லேக் ஹவுஸ்) நிறுவனம் 2021 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிட்டதனால் அதன் மீண்டுவரும் செலவினங்களை தீர்ப்பதற்கு திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டை நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆயினும், நிறுவனத்தின் 2021-2024 வருடங்களுக்கான மூலோபாயத் திட்டம் தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 2022 ஆம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்க வருமானத்தை நிறுவனம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிறுவனம் தனது வருமானத்தில் கிட்டத்தட்ட 65%

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதனால் இந்த ஆண்டில் செலவைக் குறைப்பதற்கு ஒரு தன்னார்வ ஊழியர் ஓய்வுதியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது 2021 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க அதன் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியின் ஒதுக்கீடுகளை நம்பியிருக்க வேண்டியிருந்தது. இவ்வருடம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மீண்டுவரும் செலவினங்களுக்காக மாத்திரம் நிதி ஒதுக்கீடுகள் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது. சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அதன் மீண்டுவரும் செலவினங்களைப் பூர்த்தி செய்துள்ளது. வசந்தம் தொலைக்காட்சியின் (VTV) ஒளிபரப்புகளை விரிவுபடுத்துவதற்காக திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இந்த மூன்று இலத்திரனியல் ஊடக நிறுவனங்களிலும் தொழிநுட்ப மேம்பாடுகள் செய்யப்பட வேண்டும் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் (லேக் ஹவுஸ்) மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு ஆகிய நிறுவனங்களை சுயமாக வருமானம் உழைக்கும் நிறுவனங்களாக மாற்றுவதும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை சமரச நிலைக்கு கொண்டு வருவதும் இந்த அமைச்சின் நோக்கமாக உள்ளது.

இலங்கை அச்சக நிறுவனம் சுயமாக வருமானம் உழைக்கும் நிறுவனமாகும். இது 2021.11.17 ஆம் திகதிய 2254/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் நாட்டில் உள்ள அச்சுத் தொழிலுக்கான திறமையான நபர்களை உருவாக்கும் பணியை சிறப்பாக மேற்கொண்டுவருகின்றது.

சுயமாக வருமானம் உழைக்கும் நிறுவனமான செலசினே நிறுவனத்தை மேலும் வலுப்படுத்துவது இன்றியமையாத காரணமாக இருப்பதனால் திறமையான ஊழியர்களை ஈர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. செலசினே நிறுவனத்தை சட்டபூர்வமான நிறுவனமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் இறுதி கட்டத்தில் உள்ளது.

இலங்கை மன்ற நிறுவனமானது சந்தை தேவைக்கான பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இலங்கை மன்றச் சட்டத்தை எதிர்கால தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை கட்டமைப்பு ரீதியில் மறுசீரமைக்கப்பட்டு இலத்திரனியல், அச்சு மற்றும் புதிய ஊடகங்களை உள்ளடக்கிய வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கான நியாய சபையாகவும் ஊடகக் கல்வியை மேம்படுத்தும் மையமாகவும் மறுசீரமைக்கப்படும் என கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இலங்கையின் பத்திரிகைப் பேரவையை மறுசீரமைக்கும் வகையில் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கைப்

பத்திரகைப் பேரவையினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நடத்தைக் கோவைக்கு 40 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

லங்கா புவத் நிறுவனம் தனது இணையத்தளம் மற்றும் தொலைபேசி SMS சேவையை பராமரித்து வருகின்றது. இந்த நிறுவனத்தை நாட்டின் அபிவிருத்திச் செயல்பாட்டில் செயலூக்கமுள்ள விதத்தில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சமூகமும் சரியாகச் செயல்படுவதற்கும் அதன் சீர்திருத்தங்கள் மற்றும் புத்தாக்கங்கள் சிறந்த முறையில் நடைபெறுவதற்கும் ஊடகங்கள் தனது பிரதான பணியான மக்கள் கருத்தை சரியாக வடிவமைக்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு ஆற்றல்மிக்க அபிவிருத்தி வேலைத்திட்டத்தை சாதகமான திசையில் செலுத்துவதற்கு ஊடகங்களின் சக்தி வாய்ந்த ஆற்றலை சரியான முறையில் பயன்படுத்துவதே இந்த அமைச்சின் நோக்கமாகும்.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

"நன்றாக அறிவூட்டப்பட்ட பல்லின மற்றும் முனைப்பான சமூகம்."

பணிக்கூற்று

"மக்கள் நேயமுடன் கூடிய, அபிவிருத்தியை நோக்கிய சுதந்திரமானதும் பொறுப்புவாய்ந்ததுமான இலங்கைக்கான ஊடக கலாச்சாரத்தை ஸ்தாபிப்பதற்காக வசதியளித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல்"

குறிக்கோள்கள்

1. சிறந்த வெகுசன ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
2. பொதுமக்களுக்கு தகவல்களை அடைந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
3. ஊடகத் துறையை நவீன தொழில்நுட்பத்துடன்; நாளதுவரைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.
4. ஊடகத் தொழிற்துறையாளர்களின் தொழில் அந்தஸ்தை உயர்த்துவதற்கு உடந்தையாக இருத்தல்.
5. தேசிய அபிவிருத்தி முயற்சியில் ஊடகப் பங்களிப்பு மற்றும் பங்கேற்பை அதிகரித்தல்.
6. சர்வதேச ரீதியாக நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
7. அமைச்சின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான மனிதவள அபிவிருத்தியை கட்டியெழுப்புதல்.
8. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் சொத்துக்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல்.
9. ஏற்புடை தரப்பினர்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் மொத்த அபிவிருத்தி செயன்முறையையும் வலுவூட்டல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

2020.10.06 ஆம் திகதிய இல 2196/27 அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விடய எல்லை, கடமைகளும் பணிகளும் மற்றும் அமைச்சின் விசேட முன்னுரிமைகள்

1.3.1 விடய எல்லை

பேச்சு மற்றும் எழுத்தின் சுதந்திரம் அடங்கலாக சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும் தகவல் அறிவு மற்றும் அபிப்பிராயங்களை சரிசம நிலையில் பிரசாரம் செய்வதற்கு உகந்த வெகுசன ஊடகக் கலாசாரமொன்றை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

1.3.2 கடமைகளும் பணிகளும்


"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்தும் ஏனைய தேசிய கொள்கைகளுக்கு இணங்க "வெளிப்படைத்தன்மையுடனான வெகுசன ஊடகக் கலாசாரத்தை அறிமுகப்படுத்துவதற்காக" உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெகுசன ஊடகத் துறையுடன் தொடர்புடைய கொள்கைகளை வகுத்தல், அஞ்சல் சேவையை மக்கள் மையப்படுத்திய தேவைகளை இலக்காகக் கொண்ட சேவையாக விரிவுபடுத்தல், தேசிய வரவுசெலவுத்திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தல். அதனுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும். மேலும் அவற்றை தொடராய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

1.3.3 விசேட முன்னுரிமைகள்

- வெளிப்படைத் தன்மையுடனான வெகுசன ஊடகக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்.
- தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊடகத் தரங்களைப் பேணுதல்.
- ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள், சமூகக் கலாசாரப் பெறுமதிகள் மற்றும் சமூக விழுமியக் கட்டமைப்புகளை மீறாதவாறு செயற்படுவதற்கான பின்னணியை உருவாக்குதல்.
- இலங்கைப் பத்திரிகையாளர் சபையை மறுசீரமைத்தல்.
- ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக மாகாண அடிப்படையில் ஊடக சங்கங்களை நிறுவுதல்.
- இலங்கை தபால் சேவையை மக்களின் தேவைக்காக விஸ்தரித்தல்.
- சமூக ஊடக வலைத்தளங்கள் உட்பட புதிய ஊடகப் பாவனை மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான அறிவினையும் புரிந்துணர்வினையும் வழங்குவதற்காக சமூகக் கற்கைகளுக்காக செயல்முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்டு புதிய வாய்ப்புகளுக்கு ஏற்றவகையில் செயற்றிறன் மிக்க மக்களைக் கேந்திரமாகக் கொண்ட டிஜிட்டல் தபால் சேவைகளுக்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- சர்வதேச தரங்களுக்கு ஏற்றவகையில் ஊடகத்துறையில் உயர்கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

1.4 நிறுவன விளக்கப்படம் - 2021

வெகுசன ஊடக அமைச்சு



ஏனைய பதவிகள் :	**அனுமதிக்கப் பட்ட**		**அனுமதிக்கப் பட்ட**
கருத்திட்ட நடைமுறைப்படுத்தும் உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்	44	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உத்தியோகத்தர்	01
புலனாய்வு உத்தியோகத்தர் (இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகம்)	11	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உதவியாளர்	05
அரச முகாமைத்துவ உதவியாளர்	27	உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர்	01
வரவேற்பு உத்தியோகத்தர்	01	சாரதி	18
		அலுவலக உதவியாளர்	20
அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை - 158 **உண்மையான ஆளணி – 98** மூலம் : முகா.சே. திணை.–2020.09.04, 2020.09.18 மற்றும் 2020.11.27 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய			

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் 03 திணைக்களங்கள் உள்ளன

1.5.1 அரசாங்க தகவல் திணைக்களம்

அரசாங்க தகவல் திணைக்களம் 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு விடயங்கள் மற்றும் பொதுமக்களுக்காக அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பெதுமக்களை அறிவூட்டுவது இந்தத் திணைக்களத்தின் பிரதான பணியாகும். பூகோல தொழில்நுட்ப போக்குகளுக்கு இசைவாக்கமடைந்து தகவல் தொழில்நுட்ப செயன்முறையை முகாமை செய்து சுதந்திர மற்றும் பொறுப்புள்ள உயர் ஊடக கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு உடந்தையாக இருப்பதும் தலைமைத்துவத்தை வழங்குவதும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

1.5.2 அரசாங்க அச்சுத் திணைக்களம்

1802 ஆம் ஆண்டில் "இலங்கை அரசின் வர்த்தமானி"ஆக இலங்கையின் முதலாவது வர்த்தமானி வெளியிடப்பட்டதன் மூலம் அரச அச்சகமாக இந்த நிறுவனம் எழுத்து மூலம் ஆரம்பிக்கப்பட்டது. பிற்பட்டகாலங்களில் அரசாங்க திணைக்களமாக வளர்ச்சியடைந்த அரசாங்க அச்சுத் திணைக்களம் தற்போது "அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அச்சகமாக" விளங்குகின்றது. விஷேடமாக குறைந்தளவிலான வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இத்;திணைக்களம் தற்போது நவீன உயர் தொழில்நுட்பத்தோடு இணைந்து மிகவும் உயர்ந்த பணியொன்றை அரசாங்கம் சார்பாக வழங்குகின்றதென்பது மிகவும் தெளிவான விடயமாகும். தொழிற்சாலையொன்றின் அமைப்பைப் பெற்ற உற்பத்தி நிறுவனமொன்றான இத்திணைக்களம் சகல அரசாங்க மற்றும் அரச சார்பான நிறுவனங்களின் அவசர, முக்கியமான இரகசி;ய அச்சு நடவடிக்கைகளை உயரிய தரத்தில் உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலம் ஏற்புடைய நிறுவனங்களின் நம்பிக்கையை வென்றுள்ளது.

நவீன அச்சு முறைமைகளைப் பயன்படுத்தி உயர் தரத்திலான அச்சு வெளியீடுகளை சமர்ப்பித்து தொடர்ச்சியான சேவையை மேற்கொண்டுவருகின்றது. அதன் கீழ் பாதுகாப்பான அச்சிடல் முறைகளை விருத்தி செய்து இலங்கை அரசாங்கத்தின் சகலவிதமான இரகசிய அச்சுத் தேவைகளையும் நிறைவேற்றுவது அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் முதன்மை எதிர்பார்ப்பாகும்.

1.5.3 இலங்கை அஞ்சல் திணைக்களம்

வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை அஞ்சல் திணைக்களம், தொடர்பாடல் சேவை வழங்குவதில் ஒரு முன்னோடியாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அத்தியவசியச் சேவைகளை வழங்கும் அரச நிறுவனமாகத் திகழ்கின்றது. ஏகாதிபத்தியம் முதல் தனியார் மயப்படுத்தல் போட்டி நிலைமை ஏற்படுதல் வரை அஞ்சல் திணைக்களம் தனது வளர்ச்சிக்காக அநேகமான சவால்களுக்கு அதாவது பிரதானமாக தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின்

துரித வளர்ச்சிக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. ஆயினும், இலத்திரனியல் வர்த்தக நடவடிக்கை மற்றும் இணைந்த சேவைகளை வழங்குதல் (E-commerce) நிதிச்சேவை (Financial Inclusion) மற்றும் வழங்கல் / நிதிச்சேவை (Logistics Services) ஆகிய பகுதிகளைச் சார்ந்த வணிகப் போக்கின் வளர்ச்சிக்கு மத்தியில் திணைக்களம் பெற்றுள்ள சந்தர்ப்பம் மிக முக்கியமானது.

அதற்கிணங்க இலங்கை அஞ்சல் திணைக்களமானது வெளிநாட்டினைப் போன்று உள்நாட்டிலும் அஞ்சல் சார்ந்த நவீன போக்குகளை பின்பற்றி புதிய தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவினைக் கையாண்டு மாறுபட்டுச் செல்லும் வாடிக்கையாளர் தேவைக்கமைய வினைத்திறன் மிக்க, தரம் வாய்ந்த சேவைகளைப் பெற்றுத் தரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எனவே, அஞ்சல் திணைக்களம் என்பது இலாபமீட்டுதலை மாத்திரம் நோக்காகக் கொண்டு இயங்கும் நிறுவனமல்ல சமூக சேவைகளை ஆற்றுவதில் அரசின் முகவராக மிக முக்கிய பொறுப்பினை சமூகம் சார்ந்து நிறைவேற்றும் அரச நிறுவனம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

iii) வ/ப சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு

iv) வ/ ப ஐக்கிய பத்திரிகைக் கம்பனி (லேக் ஹவுஸ் நிறுவனம்)

v) இலங்கைப் பத்திரிகைப் பேரவை

vi) செலசினே ரூபவாஹினி நிறுவனம்

vii) இலங்கை பத்திரிகை நிறுவனம்

viii) இலங்கை மன்றம்

ix) இலங்கை அச்சு நிறுவனம்

x) தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

1.6.1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி ஒலிபரப்பு திணைக்களம் எனும் சுயாதீன நிறுவனமாக நிறுவப்பட்ட இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம்திகதி குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஒலிபரப்பு தொடர்பாடலில் முற்போக்கு முன்னணி ஊடக வலையமைப்பாக நேயர்களை

மையப்படுத்தி அந்தந்த சமூக தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு "வசதியளிப்பாளராக" பொதுமக்களின் பல்வேறுபட்ட தேவைப்பாடுகளை நிவர்த்திக்கும் இலத்திரனியல் ஊடக வலையமைப்பாக மாறியுள்ளது. அத்தோடு, நீள் அலைவரிசை, மத்திய அலைவரிசை, சிற்றலை மற்றும் FM அலை வரிசைகள் ஊடாக உள்நாட்டு ஒலிபரப்பு வலையமைப்பில் தேசிய அலைவரிசைகள் 06 ஐயும், பிராந்திய அலைவரிசைகள் 07 ஐயும் சமூக வானொலிச் சேவை ஒன்றையும் கொண்டு சேவைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பிரதான ஒலிபரப்பு நிலையங்கள் 09 ஊடாக நாடு முழுவதும் ஒலிபரப்பப்படுகின்றது. மேலும், புத்தளம் மற்றும் திருகோணமலை மீள் ஒலிபரப்பு நிலையங்கள் ஊடாக வெளிநாட்டு ஒலிபரப்பு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நம்பகமான மற்றும் விசுவாசமான ஊடகப் பணியை மேற்கொண்டு வரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேயர்களோடு நெருக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இணையத்தளத்தினூடாக சர்வதேசத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.1966 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் செயற்பாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

1.6.2 இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 1982 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளதுஇந்த நாட்டில்ஒளிபரப்பு பிரச்சார சேவையொன்றை கொண்டு நடாத்தும் பணி மற்றும் அந்த சேவையை அபிவிருத்தி செய்தல், விரிவுபடுத்தல் மற்றும் விருத்தி செய்தல் மற்றும் அதனுடன் இடைதேர்வான விடயங்களுக்கும் சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளுக்குள் நிகழ்சிகளை தயாரித்தல் மற்றும் ஒளிபரப்புச் செய்தல் உள்ளடங்குகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் "ரூபவாஹினி", "ஐ" மற்றும் "நேத்ரா" ஆகிய மூன்று அலைவரிசைகள் ஊடக தமது நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. துரிதமாக மாற்றமடைந்து வரும் தொலைக்காட்சி தொழில்நுட்பத்திற்கு இசைவாக்கம் அடைந்து பார்வையாளர்களுக்கு உயர் தரத்திலான படைப்புக்களை வழங்குவதற்கு தேசிய தொலைக்காட்சி என்ற ரீதியில் தேசிய பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது. மூன்று தசாப்த காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகளை வென்றெடுத்த நிகழ்ச்சிகளை தயாரித்து மற்றும் செய்திகளை வழங்கி பார்வையாளர்களின் இரசனை மற்றும் அறிவுக்கு விருந்தளிப்பதற்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு இயலுமாகியுள்ளது. அத்தோடு நாட்டில் நடைபெறும் அபிவிருத்தி தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்கு அரச ஊடகம் என்ற வகையில் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தனது பணியை செய்துள்ளது.

1.6.3 வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

1979 ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்த சுயாதீன ஊடக வலையமைப்பு தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகத் துறையினுள் இலங்கையின் முன்னணி ஊடக வலையமைப்பொன்றாக தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது. வ/ப சுயாதீன ஊடக வலையமைப்பு ITN அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுக் கம்பனி ஒன்றாக

கொண்டுநடாத்தப்படுகின்றது. இலங்கை ரசிகர்களுக்காக சுயாதீன தொலைக்காட்சி – ITN மற்றும் வசந்தம் TV என இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளும் ITN FM மற்றும் வசந்தம் FM எனும் வானொலிச் சேவைகள் இரண்டும் கொண்டுநடாத்தப்படுகின்றது. கடந்த சில வருடங்களுக்குள் மிகவும் பலமான தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக வலையமைப்பாக சுயாதீன ஊடக வலையமைப்பு விருத்தியடைந்துள்ளதோடு, இலங்கை பூராகவும் ஒளிபரப்பப்படுகின்ற பலமான ஒளிபரப்பு சக்தியைக் கொண்டுள்ளது. ஆரம்ப கட்டத்திலிருந்து உயர் தரத்திலான நிகழ்ச்சிகளை தமது ரசிகர்களுக்கு வழங்குவதற்கு சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆற்றல் பெற்றிருந்தது. இலங்கையின் கலாசாரம், சமூக மற்றும் சமய விழுமியங்களை பேணிய வண்ணம் குடும்ப அலைவரிசையாக நற்பெயரையும் கௌரவத்தையும் உயர் வரவேற்பையும் பெற்றுள்ளது.

1.6.4 வ/ப ஐக்கிய பத்திரிகை நிறுவனம் (லேக் ஹவுஸ் நிறுவனம்)

"லேக் ஹவுஸ்"எனும் பெயர்கொண்டு அழைக்கப்படும் வகூப ஐக்கிய பத்திரிகை நிறுவனம் 1926 ஆம் ஆண்டு இலங்கையில் நிறுவப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். 1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வகூப ஐக்கிய பத்திரிகைகள் நிறுவன (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் 88% உரிமை அரசாங்கத்தின் சார்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத் திணைக்களத்திற்கு உரியது. தற்போது நாட்டின் பிரதான பத்திரிகை அச்சிடும் நிறுவனமாக தகழ்கின்றது.

இணையத்தளம் கையடக்க தொலைப்பேசிக்குள் ஊடுருவிய பின்னர் தினமின, டேலி நியுஸ் மற்றும் தினகரன் செய்தித்தாள்களின் கையடக்க மென்பொருள்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக லேக்ஹவுஸ் வெப் பக்கத்தை பயன்படுத்துபவர்களுக்கு கூடிய பொழுதுபோக்கு ரசனையுடன் செய்திகளை வெளியிடுவதற்கு புதிய ஒலிக்கூடமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கும் கிட்டிய தனது பயணப் பாதையில் ஊடகக் கைத்தொழிலில் புரட்சிகரமாக தனது இடத்தை லேக்ஹவுஸ் நிறுவனம் உறுதிப்படுத்திக்கொண்டுள்ளது. தேசிய நிறுவனமொன்றாக ஊடகக் கைத்தொழிலைப் போன்று நாட்டின் நலன் கருதி செயற்படுதல் மற்றும் அந்த நோக்கத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் தொடர்ந்தேர்ச்சியான முன்னேற்றத்தை அடைந்துகொள்வது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடாகும்.

1.6.5 இலங்கைப் பத்திரிகைப் பேரவை

1973 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை பத்திரிகைப் பேரவை இந்த அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச்சட்ட நிறுவனமாகும். பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது இந்தச் சபையின் முக்கிய நோக்கமாக காணப்படுவதோடு, அந்த சுதந்திரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுத்தல், பத்திரிகைகளின் உள்ளடக்கத்தின் தரத்தை கூட்டுதல், பொதுமக்கள் உண்மையான விடயங்களை அறிந்துகொள்வதற்கு உள்ள உரிமையை உறுதிசெய்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது. பத்திரிகை செய்திகளில்

பிரசுரிக்கப்படும் சில விவாதத்திற்குரிய விடயங்கள் தொடர்பாக விழுமிய ரீதியாக ஊடகவியலாளர்களை தயார்படுத்தி ஏதேனும் சட்டமுறையான பிரவேசத்தினூடாக ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவர்களது தொழில் ரீதியான தரத்தைக் கூட்டுவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகைகளை முறைமைப்படுத்தல், பத்திரிகை தயாரிப்பு மற்றும் பிரசுரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள சகல பிரிவுகளுக்குமிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருத்தல், பத்திரிகைப் பாவனை மற்றும் பத்திரிகைகளின் அவசியப்பாடு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளல், பத்திரிகை தொழிற் துறைக்கு ஆட்சேரப்பு முறைகள், நலனோம்பல், கல்வி மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தல் மற்றும் பத்திரிகையை கொண்டுநடாத்துவதுடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பது பத்திரிகைப் பேரவையின் பொறுப்பாகும்.

1.6.6 செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

அப்போது திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் செலசினே தொலைக்காட்சி நிறுவனம் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இல 979/2 மற்றும் 1997.06.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து இது வரையில் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த நிறுவனம் அடிப்படையில் அரசாங்க விளம்பரங்களை வெளியிடும் நிறுவனமாகும். அத்தோடு நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனமாகவும் செயற்படுகின்றது. சுயாதீன சட்ட முறையான நிறுவனமொன்றாக நிறுவப்படாத போதிலும் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் கீழும் திறைசேரியின் செயலாளருக்கு 100% உரிமையையும் கொண்ட பிணையத்தின் மீது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக நிறுவுவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

1.6.7 லங்கா புவத் நிறுவனம்

லங்கா புவத் நிறுவனம் சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்களுக்கு இணைவாக 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சட்டமுறையான அதிகாரமுள்ள நிறுவனமொன்றாகும். இந்த நிறுவனம் இலங்கையில் வெளிநாட்டு செய்தி முகவர் நிறுவனமாக (Foreign News Agency) வெளிநாட்டுச் செய்தி முகவர்களுடன் செயற்பட்ட போதிலும் கடந்த நான்கு வருடங்களில் அதன் பணி ஸ்தம்பித்துள்ளது. தற்போது லங்கா புவத் நிறுவனம் செயலிழந்துள்ளதோடு மொபிடல் நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தித்திற்கு அமைய குறுஞ்செய்திச் சேவையொன்றை (SMS Alert) நடாத்திச் செல்வதோடு இணையத்திலும் செய்திகளை இற்றைப்படுத்துகின்றது. இந்த நிறுவனம் வருமானம் உழைக்கும் பிரிவொன்றாக "லங்கா புவத்" என்ற பெயரை சர்வதேசமயப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

1.6.8 இலங்கை மன்ற நிறுவனம்

இலங்கை மன்ற நிறுவனம், இலங்கையில் வயது வந்தோருக்கான கல்வியினை வழங்கும் இலங்கை மன்ற திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சமூக ஒற்றுமை குறித்த துறைகளின் ஒரு தொகுப்பினை வழங்கும் ஒரு முண்ணனி நிலையமாகும்.இது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக, 1963 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதில் இருந்து மனித உரிமைகள், ஜனநாயகம், நல்லாட்சி, சமாதானம் மற்றும் ஒருமைப்பாடு போன்ற துறைகளில் பயிற்சி மற்றும் கல்வியினை வழங்குவதில் ஒரு தனித்துவமான மாதிரி நிறுவனமாக திகழ்கின்றது.

இலங்கை மன்ற நிறுவனம் தனது கற்றை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நாட்டின் தற்போதைய சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் என்பனவற்றில் காணப்படும் சிக்கல்களைத் தீர்க்க உதவும் தேசிய மையமாக இன்று இலங்கை மன்ற நிறுவனம் சேவை செய்கின்றது, அத்துடன் பயிற்சி மற்றும் கல்வி மூலம் எதிர்கால தேசிய தேவைகளுக்கான பரிந்துரைகளையும் தீர்வுகளையும் வழங்குகின்றது. இலங்கை மன்றத்தின் முக்கிய நோக்கமானது, உலகளாவிய மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கல்வித் தேவைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மன்ற நிறுவனச் சட்டம் தற்காலத்திற்கு அமைய திருத்தியமைக்கப்படுதல் வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, சட்டம் வரைவு செய்யப்பட்டுவருகின்றது.

1.6.9 இலங்கை அச்சு நிறுவனம்

இலங்கை அச்சு நிறுவனம் என்பது இலங்கையில் அச்சு மற்றும் கிரபிக் கலைத் துறையில் அறிவு, ஆற்றல் மற்றும் நிகரற்ற தன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் முன்னணி தொழிற்துறை நிறுவனமொன்றாகும். அப்போது தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் 1984 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டமொன்றினால் நிறுவப்பட்டுள்ளது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்வித்துறையை விருத்தி செய்தல், அச்சு மற்றும் கிரபிக் துறையில் அறிவு மற்றும் திறன்கள் நாளுக்கு நாள் விரிவடைந்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் சுயமாக நிதி உருவாக்கத்தைக் கொண்ட இலாப நோக்கமற்ற இந்த நிறுவனத்தின் விசேட செயற்பாடாக காணப்படுவது யாதெனில், நாட்டின் சமூக – பொருளாதார முன்னேற்றத்தின் கட்டமைப்புக்குள் நவீனத்துவத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அச்சுக் கைத்தொழிலுக்கு பங்களிப்புச் செய்வதாகும்.

1.6.10 தகவல் அறியும் ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் அறியும் ஆணைக்குழு பொது அதிகாரசபைகளை கண்காணிக்கும் மற்றும் தகவல் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக நிறுவப்பட்டது. சட்டரீதியாக சுயாதீன நிறுவனமான இயங்குவதோடு தகவல் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகாத முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு உரிமையுள்ள அதன் ஏற்பாடுகளை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு சிபாரிசு

செய்வதற்கான அதிகாரம் உள்ளது.மேலும் சட்டத்தின் மூலம் குற்றங்களை புரியக்கூடியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரமும் உண்டு.

சட்டத்தின் கீழ் பொது அதிகாரசபைகள் மூலம் தனது கடமைகளுக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பது பற்றி மதிப்பீடு செய்யும் ஆணைக்குழுவுக்கு உரியது. ஏதேனும் பொது அதிகாரசபைக்கு தேவையான பொதுவான சீர்திருத்தம் மற்றும் விசேடமான சீர்திருத்தங்கள் ஆகியவற்றுக்கு சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் தகவல்களை வழங்குவதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கு நியாயமான கட்டணம் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்குவதற்கும் இலவசமாக தகவல்களை வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களை சிபாரிசு செய்வதற்கும் கட்டண அட்டவணையை சிபாரிசு செய்வதற்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் வழிநடாத்துவதற்கும் சட்டத்தின் கீழ் உரிமை மற்றும் தேவைப்பாடுகளை பிரசித்திப்படுத்துவதற்கும் அவ்வாறே அரசாங்க நிறுவனங்களினால் உரிய முறையில் அறிக்கைகளை வைத்திருப்பதற்கும் தேவையான அறிவுறுத்தல் கோவைகளை வெளியிடுவதற்கும் ஆணைக்குழுவுக்கு கடப்பாடு உண்டு.

சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இதன் கீழ் எவரேனும் ஒரு ஆளை சத்தியக்கடதாசி / உறுதிமொழி மீது விசாரணை செய்வதற்கும் அவரது பொறுப்பிலுள்ள எந்தவொரு தகவலையும் வெளியிடுவதற்கான அதிகாரம் உண்டு. (விசேட தகவல்கள் இரகசியமாக விசாரணைக்கு உட்படுத்தப்படும்) சட்டத்தினால் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளிட்ட எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் காணப்படும் தகவலைப் பரிசோதிக்கும் உரிமையும் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஏதேனுமொரு முறையில் தகவல்களை வழங்குவதற்கு அரசாங்க நிறுவனமொன்றுக்கு அறிவுரை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. பொதுமக்களுக்கு வழங்கக்கூடாத தகவல்களை வெளியிடுவதற்கு (விசேட விடயங்கள் தவிர்ந்த) ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கும் அதிகாரம் உண்டு. ஏதேனும் தகவலை வழங்குவதில் தாமதம் நிகழுமிடத்து பிரஜை ஒருவரிடமிருந்து அறவிடப்பட்ட ஏதேனும் தொகையை மீண்டும் வழங்குமாற்று ஏதேனும் அரசாங்க நிறுவனத்தைக் கோருவதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு (15 ஆம் பிரிவு)

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

1.7.1 அ) கருத்திட்டத்தின் பெயர்: யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தகவல் அறியும் மற்றும் உரிமை ஊக்குவிப்பு கருத்திட்டம்.

ஆ) கொடைவழங்கும் முகவர்:சுவிற்சலாந்து அரசு

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபாமில். 4.5

ஈ) கருத்திட்டக் காலம்: 2018 மே – 2021

1.7.2 அ) கருத்திட்டத்தின் பெயர்: இலங்கையில் புவிசார் ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம்.

ஆ) கொடைவழங்கும் முகவர்: ஜப்பான் அரசு (JICA)

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ஜப்பான் யென் மில். 17,717
(JICA நிறுவனத்தின் பங்களிப்பு பெறுமதி ஜப்பான யென் மில். 13,717 உம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ஜப்பான் யென் மில். 3,505 உம் ஆகும்.)

ஈ) கருத்திட்டக் காலம்: 2021 – 2025

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 வெற்றிகள்

2.1.1 "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" வெகுசன ஊடக கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வெற்றிகொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்.

i) எசிதிசி பெரமக – சுபீட்சத்தின் மறுமலர்ச்சி

புதிய அரசாங்கத்தின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்காகவும் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ள உத்தேசிக்கும் பணிகள் பற்றி பொதுமக்களை அறிவூட்டுவதற்காக "எசிதிசி பெரமக" சுபீட்சத்தின் மறுமலர்ச்சி எனும் பிரச்சார நிகழ்ச்சி கௌரவ வெகுசன ஊடாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்களின் அறிவுரைக்கு அமைய வெகுசன ஊடக அமைச்சினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக எமது அமைச்சின் கீழுள்ள அரசாங்கத்தின் பிரதான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் முனைப்புடன் செயற்படுகின்றன. மேலும், தனியார் ஊடக நிறுவனங்களையும் இதற்காக தொடர்புபடுத்திக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

- அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் பற்றி பொதுமக்களை அறிவூட்டுதல்.
- அபிவிருத்தி செய்திகளுக்கு ஊடகங்களில் குறிப்பிடத்தக்க அளவு இடத்தை வழங்கல்.
- அபிவிருத்தி செய்திகளை மக்கள் மயப்படுத்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக உத்தியோகத்தர்களை அறிவூட்டல்.
- ஊடகங்கள் மூலம் அறிவூட்டுவதன் மூலம் அபிவிருத்தி கருத்திட்டங்களின் பயனாளிகளை நிரந்தரமாக அந்த செயற்பாட்டுக்கு பங்கேற்கச் செய்தல்.

தற்போதைய ஊடகப் பாவனைக்குள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் முன்னேற்றத்திற்கு தடையேற்படும் வகையில் மக்களுக்கு தகவல்கள் பரப்பப்படுவதனால் அந்த நிலமையைத் தவிர்ப்பதற்கு சரியான அபிவிருத்தி தகவல்களை மக்களுக்கு வழங்கும் பொருட்டு அதற்காக முழு அரச துறையினதும் உதவியைப் பெற்றுக்கொள்வது இந்தக் கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க, கைத்தொழில், சுற்றுலா மற்றும் மின்சக்தி ஆகிய அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு, லேக்ஹவுஸ் நிறுவனம் மற்றும் தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தினால் "அபிவிருத்தி செய்திகளை மக்கள் மயப்படுத்தும் ஒன்றிணைந்த பிரச்சார நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

ii) ஒரு தெளிவான ஊடகக் கொள்கை எந்தவொரு ஜனநாயக சமுதாயத்தின் ஆரோக்கியமான அம்சம்மாகும். சர்வதேச மரபுகளால் அங்கீகரிக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் அதில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. சரியான தகவல் மற்றும் அறிவுடன் போஷிக்கப்படும் போதுதான் மக்கள் சரியான அரசியல், பொருளாதார மற்றும் சமூக முடிவுகளை எடுக்க முடியும். அதற்காக, தகவல், அறிவு மற்றும் கருத்துக்களை தடையின்றி தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும்.

அதற்கிணங்க, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைய அமைச்சு தொடர்ந்தும் செயல்படும். மேலும், சரியான தகவல்களை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அனைத்து மக்களுக்கும் தகவல்களை அணுகுவதற்காக பிராந்திய ஊடக நிறுவனங்களின் ஒளிபரப்பு வலயங்களை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமயப்படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக அமைச்சுக்குரியதாகும். 2017 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகளை நன்றாக செயற்படுத்துவதும் அதனூடாக ஊழலற்ற சிறந்த பொறுப்புள்ள அரசாங்க சேவையை நிறுவுவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தச் சட்டத் தை சமூகமயப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து வெகுசன ஊடக அமைச்சு முனைப்புடன் பங்களிப்புச் செய்துள்ளது.

பிரஜைகளுக்கு தகவல் உரிமை சட்டத்தின் பயன்பாட்டை இலகுபடுத்துவதற்கும் அதன் மூலம் பிரஜைகளின் அறிவுமட்டத்தை அதிகரித்தல் மற்றும் தகவல் கோரிக்கை மூலம் பொதுமக்கள் தேவைப்பாடுகளை துரிதமாக நிறைவேற்றுதல் ஆகிய விடயங்களைக் கருத்திற்கொண்டு இணையத்தளம் (www.rti.gov.lk) நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் உத்தியோகபூர்வ செய்திகளை பிரசுரித்தல் மற்றும் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் தொடர்பில் அறிவூட்டல் இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் அறியும் உரிமைப் பற்றிய சட்டம் தொடர்பில் செயலூக்கமுள்ள மற்றும் பயனுள்ள வகையில் அணுகுவதற்கு ஏற்ற வகையில் இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. 2021.12.31 ஆம் திகதியளவில் இந்த இணையத்தளத்தை 150,383 பேர் பரிசீலித்துள்ளனர்.

தகவல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது தகவல் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் மற்றும் தகவல் கோரிக்கை முறைமைக்கு அமைய ஆணைக்குழுவுடன் அமைச்சு ஒருங்கிணைக்கப்பட்டது. தற்போது வருடாந்த அறிக்கைகள், மாதாந்த அறிக்கைகள் 203 உம் தகவல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
அவ்வாறே, பிரஜைகள் அல்லது பொது அதிகாரசபைகளினால் ஆணைக்குழுவினால் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பில் மற்றும் தகவல் அறியும்

ஆணைக்குழுவின் பல்வேறுபட்ட கோரிக்கைகள் ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

2021.12.31 ஆம் திகதியளவில் நாளாந்தம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டதோடு, அண்ணளவாக 100 பேருக்கு முறையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் போது பிரஜைகளுக்கு தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் ஆய்வு செய்வதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் வரும் பிரஜைகளை அறிவூட்டுவது பிரதான நோக்கமாகும்.

விசேடமாக இளைஞர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு மற்றும் பிரஜைகளுக்கு தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் அறிவூட்டும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் RTI face book பக்கத்தின் மூலம் கவர்ச்சிகரமாக தகவல் அறியும் சட்டம் தொடர்பில் அறிவூட்டப்படுகின்றது. தற்போது 3000 பேர் இந்தப் பக்கத்தைப் பார்வையிட்டுள்ளனர். இது நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றது.

தகவல் அறியும் சட்டத்திற்கு ஏற்புடையதாக தகவல் அலுவலரின் மற்றும் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் வழிகாட்டல் கையேடொன்றை நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, தற்போது அமைச்சுக்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்கு 1780 பிரதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மேலும், ஏனைய பொது அதிகார சபைகளுக்கு இந்த ஆவணங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. வெளியீடுளை பகிர்ந்தளிப்பதன் நோக்கம் நிறுவனங்களிலுள்ள தகவல் அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்துவதாகும்.

பொது அதிகாரசபை மூலம் அறிவிக்கப்படும் தகவல்கள், தகவல் அலுவலர்கள் மற்றும் மேன்முறையீட்டு அலுவலர்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட தரவுத் தளத்தை (Database) அடிப்படையாகக் கொண்ட தகவல்கள் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதோடு, இந்தத் தகல்கள் நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன. 2021.12.31 ஆம் திகதியளவில் தகவல் அலுவலர்கள் 3005 பேரின் தகவல்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

“தினமின” மற்றும் “தினகரன்” ஆகிய பத்திரிகைகளுடன் இணைந்து மாதாந்த பத்திரிகை அனுபந்தமாக வெளியிடப்படும் “பவன” அனுபந்தம் சிங்களம் மற்றும் தமிழ் பத்திரிகைகளில் கடந்த 02 வருடங்களாக பிரசுரிக்கப்பட்டுவருகின்றன. செப்டம்பர் 28 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தகவல் உரிமை தினத்தையொட்டி “பவன” பத்திரிகையின் விசேட இதழ் வெளியிடப்பட்டது.

தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக பல்வேறுபட்ட நிறுவனங்களினால் செய்யப்படும் கோரிக்கைகளுக்கு வளவாளர்கள் தொடர்ச்சியாக அனுப்பப்படுகின்றனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் மேல் மாகாணத்தில் அனைத்து நிரல் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் போன்ற பொது அதிகாரசபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தகவல் அலுவலர்கள் 150 பேருக்கு 03 நிகழ்ச்சித்திட்டங்கள் Afriel இளைஞர் வலையமைப்பின் நிதி

அனுசரணையுடன் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. மேலும், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் 22 நிகழ்ச்சித்திட்டங்களை 2022 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

iii) 21 ***ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதில் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் மிகவும் உயர்வாகக் கருதப்படுகின்றது. அத்தோடு அதைப் பாதுகாப்பதற்காக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பொருட்டு ஊடக நிறுவனங்கள் மற்றும் அங்கு பணியாற்றும் தொழில் வல்லுநர்களின் பணிக்கடமைகளை சுதந்திரமாக நிறைவேற்றுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்.***

ஊடகவியலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நன்மை திட்டத்தை அறிமுகப்படுத்துதல். – "எசிதிசி" காப்புறுதித்திட்டம்.

ஒரு நாட்டினது தகவல் பரிமாற்ற செயற்பாட்டின் போது ஊடகவியலாளர்களினால் விசேட பணி ஆற்றப்படுகின்றது. புதிய ஊடகங்களின் தோற்றத்தோடு ஊடகத் துறையில் பரப்பெல்லை இன்னும் விசாலமடைந்துள்ளதோடு தொழில்நுட்ப ரீதியிலும் ஆக்கத்திறன் ரீதியிலும் பாரிய வளர்ச்சி அடையப்பெற்றுள்ளது. அந்த வகையில் ஊடகவியலாளர்கள் பல்வேறுபட்ட துறைகளில் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான "சுபீட்சத்தின் நோக்கு" திட்டத்தில் பொது மக்களுக்கு சரியான அரசியல் பொருளாதார மற்றும் சமூகத் தீர்மானங்களை எடுப்பதற்கு சரியான தகவல்கள் அவசியப்படுகின்றன. அதற்காக தங்கு தடையற்ற தகவல் அறிவு மற்றும் கொள்கைகளை பரிமாற்றம் செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களை அறிவூட்டும் தேசியப் பொறுப்புக்கு தோள்கொடுத்து நாடு பூராகவும் வியாபித்துள்ள அனைத்து ஊடகவியலாளர்களும் தமது பணியை செவ்வனே நிறைவேற்ற அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில் ரீதியான பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஆர்பாட்டங்கள் மற்றும் அவசர அனர்த் நிலமைகளின் போது செய்திகளை சேகரிக்கின்ற போது அதிகமானோருக்கு தனது உயிரை துச்சமாக மதித்து செய்திகளை சேகரிக்க நேரிடுகின்றது.

ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்படும் இந்த முக்கிய செயற்பாட்டை புரிந்துகொண்ட இந்த அமைச்சு அவர்களின் நலன்புரிக்காக "எசிதிசி" காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் பல ஊடகவியலாளர்களுக்கு ஏதேனும் காப்புறுதித் திட்டமொன்று இருந்த போதிலும் சுதந்திர மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு எவ்வித காப்புறுதி நலத்திட்டமும் நாட்டில் இல்லை என்ற விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது மற்றும் அவசர விபத்துக்களின் போது காப்புறுதி நலன்களை வழங்குவதற்கும் சத்திர சிகிச்சை மற்றும் மரணத்தை விளைவிக்கும் நோய்களுக்கான விசேட காப்பீட்டையும் உள்ளடக்கிய வகையில் "எசிதிசி" காப்புறுதித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டத்திற்கு 2021 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் ரூ.மில். 100 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு ஊடகவியலாளர்கள் 3844 பேருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் காப்புறுதி உறுதிகளை வழங்குவதற்கு வெகுசன ஊடக அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.மில். 99.93 செலவிடப்பட்டுள்ளது.

iv) ஊடகத் துறையில் சமகால உலகளாவிய வளர்ச்சியுடன் இலங்கை ஊடகத் துறைக்கு உள்ள தொடர்புகள் பற்றி புரிந்துணர்வுடன் ஊடகத் தரப்படுத்தல் தொடர்பிலான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் சமூக கலாசார அடையாளங்கள் போன்ற துறைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

சர்வதேச சட்ட திட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி கருத்திற்கொண்டு இலங்கையில் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்புகளை சமூக, கலாசார விழுமியங்களைப் பேணி அவற்றுக்கு விசேட கவனத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தோடு தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்களை முறைமைப்படுத்துவதற்கு புதிய ஒளிபரப்பு ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

v) ஊடகக் கொள்கைகளை திட்டமிடும் போது ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் கலாசாரம், சமூகம், குடும்பம் மற்றும் மனித உறவுகள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக கலாசாரப் பெறுமானங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் வரையறைகளை விஞ்சாத வண்ணம் புரிந்துணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

அமைச்சினால் ஒழுக்க விழுமியக் கோவையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ) தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை ஒழுங்குபடுத்தல்

இலங்கையில் வானொலி ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்யும் அதிகாரத்தை வழங்கும் சட்டமாக 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் என்பன காணப்படுகின்றன. மேற்படி சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்குரிய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்க முடியும்.

இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் நோக்கம் பொறுப்புள்ள மற்றும் பொறுப்புக்கூறும் ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதாகும்.

2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் செயற்பாட்டிலுள்ள தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அலைவரிசைகளின் எண்ணிக்கை

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை	தனியார் அலைவரிசைகளின் எண்ணிக்கை
வானொலி	18	36
புவிசார்ந்த தொலைக்காட்சி	16	20
மொத்தம்	34	56

மேலும், இரண்டு அரசாங்க ஒலிபரப்பு நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக பிராந்திய சேவைகளும் உள்ளிட்ட ஒலிபரப்பு அலைவரிசைகள் 16 பேணப்பட்டு வருகின்றன. அத்தோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக 05 தொலைக்காட்சி சேவைகள் பேணப்பட்டுவருகின்றன.

இந்த அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சேவை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு,

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை
கேபல் தொலைக்காட்சி	04
செயற்கைகோள் தொலைக்காட்சி	03
இணையத்தள அடிப்படையிலான தொலைக்காட்சி	02
கையடக்க தொலைபேசி அடிப்படையிலான தொலைக்காட்சி	01
மொத்தம்	10

அந்தந்தக் காலங்களுக்குப் பொருத்தமான நிபந்தனைகளை தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திர விண்ணப்பத்திற்கு சேர்ப்பதன் மூலம் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதாக காணப்படுவதால் இவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் ஒற்றுமை காணப்படாத காரணத்தினால் பழைய அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகள் தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தியமைக்கப்படாத காரணத்தினாலும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான ஒழுங்குவிதிகள் இல்லாத காரணத்தினாலும் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக 2017.10.25 ஆம் திகதி நியமிக்கப்பட்ட வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை

ஒழுங்குபடுத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினால் "ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின்" வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அறிஞர் குழாத்தினால் மீளாய்வு செய்யப்பட்டது. அதன் போது ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதற்குத் தீர்வாக "இலங்கை ஒளிபரப்புச் சட்டம்" வரைவு செய்யப்பட்டது.

ஆ) செய்தி இணையத்தளங்களை பதிவு செய்தல்

இல 12/1037/37/019-1 மற்றும் 2012.08.13 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய சகல செய்தி இணையத்தளங்களும் வெகுசன ஊடக அமைச்சில் பதிவுசெய்தல் வேண்டும். அந்த சகல இணையத்தள பதிவின் போதும் பதிவுக் கட்டணமாக ரூ. 25,000.00 உம் வருடாந்தம் பதிவை புதுப்பிப்பதற்காக ரூ.10,000.00 உம் அமைச்சுக்கு செலுத்ததல் வேண்டும். 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள செய்தி இணையத்தளங்களின் எண்ணிக்கை 220 ஆகும். 2020 ஆம் ஆண்டில் 20 புதிய இணையத்தளங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அத்தோடு 27 இணையத்தளங்கள் புதுப்பிக்கப்பட்டன.

இ) இறக்குமதி செய்யப்படும் டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடுதல்

இந்த அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி அறவிடப்படும்.

இந்த வரிகள் 2017-11-07 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 2044/21 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் 2017 இல 01 எனும் நிதி (டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் வரி) கட்டளைகளின் 13 ஆவது கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாளரினால் வெளியிடப்படும் தடைநீக்க சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாது எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனமும் ஏதேனும் டெலி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக நிகழ்ச்சியை ஒளிபரப்பக் கூடாது. அதற்கிணங்க, இறக்குமதி செய்யப்பட்டு இந்த நாட்டில் ஒளிபரப்ப உத்தேசிக்கும் டெலி நாடகங்கள் திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் செயலாளரினால் நியமிக்கப்படும் மேற்பார்வை சபையொன்றினால் மேற்பார்வை செய்யப்படும்.

2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள் மற்றும் விவரண நிகழ்ச்சிகள் 2581, திரைப்படங்கள் 103 மற்றும் வர்த்தக நிகழச்சிகள் 135 க்கு அறவிடப்பட்ட வரித்தொகை ரூ.மில். 438.47 ஆகும். அந்தத் தொகை பொதுச் திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள் மற்றும் விவரண நிகழ்ச்சிகள் 602 உம் திரைப்படங்கள் 633 உம் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க 4054 தடைநீக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிக்காக ஆய்வுச் சபையின் உறுப்பினர்கள் 29 பேர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு நாளாந்தம் மூவரைக் கொண்ட உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. அவற்றினால் 258 தடவைகளில் தடைநீக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

vi) உயர் தொழில் திறன்களைக் கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்காக சர்வதேச தரங்களுக்கு அமைய அரசாங்க அனுசரணையுடன் "ஊடக உயர் கல்வி நிறுவனமொன்றை" நிறுவுதல்.

அ) இலங்கை பட்டய ஊடக நிறுவனத்தை நிறுவுதல்

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய உயர் தொழிற்துறை திறன்களுடன் கூடிய ஊடகவியலாளர்களை உருவாக்கும் பொருட்டு சர்வதேச தரங்களுக்கு அமைவாக அரசாங்க அனுசரனையுடன் ஊடக உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கு வெகுசன ஊடக அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கைப் பட்டய ஊடக நிறுவனம் Chartered Institute of Journalists - Sri Lanka எனும் பெயரில் ஊடக உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுதல் எனும் தலைப்பில் கௌரவ வெகுசன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 செப்டம்பர் 21 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்த உயர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக தற்போது வெகுசன ஊடக துறையில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு ஊடக கலாசாரம், ஊடக சம்பிரதாயத்தை நாட்டுக்கு பயனுள்ள வகையில் வழிநடாத்துவதற்கு இயலுமான வகையில் ஒழுக்கமுள்ள உயர் தொழிற் தகைமை வாய்ந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

தற்போது ஊடகத் துறையில் ஈடுபட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் ஊடகவியலாளர்களுக்கு மற்றும் ஊடகத் துறையில் ஈடுபடுவதற்கு ஆர்வமாக உள்ள பயிலுநர்களுக்கு உயர் தொழிற் திறனுடன் கூடிய ஊடகவியலாளராக தனது தொழில் பயணத்தை ஆரம்பிப்பதற்காக நிறுவனத்தினால் வழிகாட்டல் வழங்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமையுள்ள ஊடகவியலாளராக தேவையான பயிற்சியை செயல்முறை ரீதியில் வழங்குவதற்கு இந்த நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உயர் உள்ளடக்கத்துடன் கூடிய பாடநெறிகள் மூலம் மொழி அறிவு, எழுத்தாற்றல், ஆக்கத்திறன் என்ற பல்வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய வகையில் ஊடகத் தொழிலில் முறையாக ஈடுபடக்கூடிய ஊடகவியலாளர்களை உருவாக்குதல் மற்றும் தொழில் ரீதியில் எப்போதும் பெறுமதிமிக்க ஊடகவியலாளர்களை உருவாக்குவது இந்த நிறுவனத்தின் நோக்கமாகும். எதிர்காலத்தில் தொழிலை எதிர்பார்த்துள்ள ஊடகவியலாளர்களுக்குப் பதிலாக தன்னார்வத்துடன் தொழில் வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளும் செயல்முறை ரீதியான அறிவை வழங்குவது நிறுவனத்தின் பிரதான நோக்கமாக அடையாளப்படுத்த முடியும்.

அச்சு ஊடகம், இலத்திரனியல், புதிய / சமூக ஊடகங்கள் (New Media/Social Media) ஆகிய பிரதான துறைகளை உள்ளடக்கிய வகையில் கற்கைத் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆரம்ப நாள் முதல் எதிர்வரும் ஈராண்டுக்கான செயல்திட்டம்

தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அதற்குரிய செயலமர்வுகள், சான்றிதழ் பாடநெறிகள், (Certificate Courses), டிப்ளோமா (Diploma), உயர் தேசிய டிப்ளோமா (Higher National Diploma-HND) ஆகிய பாடநெறிகளை அடையாளம் காண்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் பாடநெறிகளுக்கான பாடத்திட்டம் (syllabus) தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்திற்கான நிறுவன வரைவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிற்துறை ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச மட்டத்தில் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த நிறுவனத்தை இன்னுமொரு உயர் கல்வி நிறுவனமொன்றாக உருவாக்காது அறிவு ஆற்றல் மிக்க திறமையுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகத் தொழில்துறையினரை எதிர்காலத்தில் நாட்டுக்கு வழங்குவது இந்த அமைச்சின் எதிர்ப்பார்ப்பாகும்.

ஆ) "எசிதிசி" ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்"

இலங்கை ஊடகவியலாளர்களின் தொழிலை தரம் உயர்த்தும் பொருட்டு எசிதிசி ஊடக புலமைப் பரிசில் திட்டம் வருடாந்தம் வெகுசன ஊடக அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது.

மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் முழு நேர அல்லது பகுதிநேர அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள வயது 18 – 55 இடைப்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் இணையத்தள ஊடகவியலாளர்கள் ஆகியோர் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். மேலும், விண்ணப்பிக்கும் பாடநெறி நேரடியாக வெகுசன ஊடகத் துறைக்கு ஏற்புடைய பாடநெறியாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஊடகவியலாளர் அடையாள அட்டை இருத்தல் வேண்டும்.

டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்காக 01 இலட்ச ரூபாவும் பட்டம் / பட்டப் பின்படிப்பு பாடநெறிகளை தொடர்வதற்கு 02 இலட்ச ரூபாவும் வழங்கப்படும். இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கு இரு முறை நலன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. முதலாவது தடவையில் தகைமைப் பெற்று பாடநெறியை நிறைவுசெய்து 05 வருடங்கள் கடந்த பின்னர் இரண்டாவது முறை விண்ணப்பிக்க தகுதிபெறுகின்றனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து ரூ.மில். 7.5 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 116 பேருக்கு ரூ.மில். 6.55 தொகை செலவிடப்பட்டுள்ளது.

vii) பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களை ஆரம்பிக்கும் போது அவற்றின் நிதி முதலீடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் துறையின் நேரடி முதலீடு அரசாங்கத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதோடு புதிய சட்ட விதிகள் மூலம் கண்காணிக்கப்படும்.

தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது மற்றும் இணையத்தளங்களை பதிவு செய்யும் போது அனுமதிப்பத்திரங்களை கோரும் நிறுவனங்கள் தொடர்பில் பாதுகாப்பு தடைநீக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

மேலும் ஊடக நிறுவனங்களின் அமைப்பு தொடர்பில் பாதுகாப்பு தடைநீக்கத்தைப் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும்.

viii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் வணிகப் போட்டியின் அழுத்தம் இன்றி ஊடகத் துறையில் முன்னுதாரணமாக திகழும் நிறுவனமாக மாற்றுவதற்காக பாராளுமன்றத்திற்கு வகைகூறும் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரல்.

இந்த நிறுவனங்களை நேரடி கண்காணிப்புக்கு உட்படுத்தி நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை தற்போதைய சமூகத்திற்கு ஏற்ற வகையில் அதன் தரத்தை அதிகரிப்பதற்காக வழிகாட்டல் வழங்குதல், நிறுவனங்களின் தொழிநுட்ப மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் நிறுவனங்களை அந்த நவீன தொழில்நுட்பத்துடன் இசைந்து செல்லும் வகையில் புதிய ஊடகங்களில் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல், நிறுவனம் தனது தரமான நிகழ்ச்சிகள் ஊடாக இலாப இருகூறுப் புள்ளியை அடையும் வகையில் வியாபாரத் திட்டத்தையும் ஐந்தாண்டுத் திட்டத்தையும் தயாரித்தல்.

ix) பத்திரிகைப் பேரவையை கட்டமைப்பு ரீதியில் மறுசீரமைத்து இலத்திரனியல், அச்சு மற்றும் புதிய ஊடகங்களை உள்ளடக்கிய வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கான நியாய சபையாகவும் ஊடகக் கல்வியை ஊக்குவிக்கும் நிறுவனமொன்றாகவும் மறுசீரமைத்தல்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை இலத்திரனியல் மற்றும் ஊடகங்களையும் அத்தோடு புதிய ஊடகங்களையும் உள்ளடக்கிய வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பிலான குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மறுசீரமைப்பதற்காக 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை திருத்தியமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்காக பத்திரிகைப் பேரவையினால் பொதுக் கலந்துரையாடல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ஊடகவியலாளர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக கருத்தரங்குகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

x) ஊடகவியலாளர்களுக்கு நகர வீடமைப்பு திட்டமொன்றை அமைத்தல் மற்றும் வாகனக் கடன் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்.

ஊடகவியலாளர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

xi) பிராந்திய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை செய்யும் பொருட்டு பரந்த வசதிகளுடன் "ஊடக மையங்கள்" (Press Clubs) முறைகளை மாகாண மட்டத்தில் நிறுவுதல்.

அரசாங்க தகவல் திணைக்களத்துடன் இணைந்து பிராந்திய அடிப்படையில் "ஊடக மையங்களை" நிறுவுவதற்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக மேல் மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் கொழும்பு மாவட்டத்தில் ஊடக மையமொன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

xii) சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகப் பாவனை மற்றும் இயக்கம் பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் தொடர்பால் உத்திகளை சமூகமயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

வெகுசன ஊடக அமைச்சின் அனுசரணையுடன் பொதுமக்களின் ஊடக அறிவை விருத்தி செய்வதற்காக கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் இலங்கைப் பத்திரிகைப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டன. அதற்கிணங்க, இலங்கைப் பத்திரிகைப் பேரவையினால் உயர் தர வகுப்புக்கு தொடர்பாடல் மற்றும் ஊடக கல்வி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக "தற்போதைய ஊடகப் போக்குகள்", " ஊடக அறிவு மற்றும் ஆக்கபூர்வமான பாவனை", " ஊடக கலாசாரத்தை அறிந்துகொள்ளல் மற்றும் அதன் முக்கியத்துவம்", "தொடர்பாடல் மாதிரி மற்றும் அதன் செயல்முறைப் பிரயோகம்" மற்றும் "தொடர்பாடல் கொள்கை மற்றும் ஊடக கண்காணிப்பு" எனும் தலைப்புக்களில் Zoom செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

மேலும், அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பாடசாலைகளில் ஊடக மற்றும் தொடர்பாடல் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள், சமூக வலைத்தளங்களை நடாத்தும் ஆசிரியர்கள் மற்றும் ஊடக, தொடர்பாடல் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் அறிவை அதிகரிக்கும் நோக்கில் விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. அந்த விரிவுரைகள் அடங்கிய Youtube அலைவரிசை மற்றும் Facebook பக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டு கொண்டுநடாத்தப்படுகின்றது.

சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகப் பாவனைப் பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் தொடர்பாடல் உத்திகளை சமூகமயப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு இசைவாக்கமடைவதற்காக அமைச்சின் பிரிவொன்றாக நிறுவப்பட்டுள்ள தேசிய அபிவிருத்தி ஊடக நிலையம் தனது ஒத்துழைப்பை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

xiii) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகம் (ஆறாவது பகுதி)

இலங்கையின் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கருத்திட்டமொன்றாக நடைமுறைப்படுத்தல்.

நிலப்பரப்பு தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒப்புமை (Analog) முறையிலிருந்து டிஜிட்டல் (Digital) முறைக்கு மாறி வரும் உலகளாவிய போக்குக்கு இலங்கையும் இணங்கிச் செல்லல் வேண்டும். இன்று ஒப்புமை (Analog) தொழில்நுட்பம் உலகளவில் வழக்கற்றுப் போய்விட்டது. எனவே, ஒளிபரப்பு அமைப்புகளைப் பராமரிப்பதிலும், கூடுதல் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான அரசாங்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் ஊடக நிறுவனங்கள் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உலகில் மிகவும் திறமையான டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பம் கிடைக்கும் அதே வேளையில், இலங்கை ஒப்புமை (Analog)

தொழில்நுட்பத்தைப் தொடர்ந்தும் பயன்படுத்துவதனால் அதிர்வெண் (frequency spectrum) அலைவரிசைகள் வீணாக்கப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டில், DVB-T தொழில்நுட்பத்தின் கீழ் இயங்கும் ஒப்புமை (Analog) புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை (Digital) தொலைக்காட்சி ஒளிபரப்பாக மாற்றியமைப்பதற்கு வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் DVB-T2 ஐ ஐரோப்பிய தொழில்நுட்பத்தின் கீழ் முன்னோக்கி நகர்த்துவதற்கான நடவடிக்கைகள் நேர்மறையாக முன்னெடுக்கப்பட்டன. ஆயினும், நிதிப் பற்றாக்குறையால் கருத்திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது.

2009 ஆம் ஆண்டு முதல் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் செயல்முறையை நடைமுறைப்படுத்துவதில் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு முன்னணியில் உள்ளது. அவ்வாறே, தொழில்நுட்ப தரங்களை நிறுவும் டிஜிட்டல் செயன்முறை திட்டத்தை (Digital Broadcasting Road Map) தயாரிப்பதற்கான பூரண ஒத்துழைப்பு தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, ஜப்பான் JICA உடன் இணைந்து நடத்திய சாத்தியவள ஆய்வைத் தொடர்ந்து, இலங்கைக்கு ஏற்றவாறு ஜப்பானின் ISDB-T தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாற்றியமைக்க முன்மொழியப்பட்டது. அதற்கிணங்க, டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் 2014 செப்டெம்பர் 23 ஆம் திகதி ஜப்பான் அரசாங்கத்துடன் சலுகைக் கடன் ஒப்பந்தம் (Soft Loan Agreement) ஒன்றை மேற்கொண்டது. அப்போதைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சினால் 2014 ஒக்டோபர் மாதம் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டிருந்த இந்தக் கருத்திட்டம் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தொழில்நுட்ப அமைச்சராகவும் கௌரவ வெகுசன ஊடக அமைச்சராகவும் ஒன்றிணைந்து சமர்ப்பிக்கப்பட்ட "ஜப்பான் கடன் உதவியின் கீழ் இலங்கையில் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகளை டிஜிட்டல்மயமாக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (SL-P112)" எனும் தலைப்பில் 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அப/21/0621/316/016 மற்றும் 2021.04.19 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவையின் முடிவின் பிரகாரம் இந்தக் கருத்திட்டம் இற்றைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் நடைமுறைப்படுத்த அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பத்திற்கு இசைவாக்கம் அடைவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய பாரிய நலன் யாதெனில், தற்போது பயன்பாட்டிலுள்ள அதிர்வெண் வீச்சை (frequency spectrum) அதிகமாக விடுவிக்க முடியுமாக இருப்பதாகும். எனவே, அந்த அதிர்வெண் வீச்சை 5G கம்பங்களற்ற அகல அலைவரிசை (Broadband) சேவைக்குப்

பயன்படுத்த முடியும் என்பதோடு, இதன் மூலம் நவீன தொழில்நுட்பத்தை அனுபவிக்கும் நன்மையும் நாட்டுக்கு கிடைக்கின்றது.

அனைத்து ஒளிபரப்பு செயற்பாட்டாளர்களினால் பேணப்பட்டுவரக்கூடிய தனியான ஒளிபரப்பு வலையமைப்புக்களுக்குப் பதிலாக டிஜிட்டல் (Digital) ஒளிபரப்பு வலையமைப்பு செயற்பாட்டாளர் (Digital Broadcast Network Operator - DBNO) என தனியான செயற்பாட்டாளர் ஒருவர் நிறுவப்படுவது தொலைக்காட்சி ஒளிபரப்புத் துறையில் அடையப்பெறும் வெற்றியாகும்.

ஒப்புமை (Analog) முறையில் அனுபவிக்கும் பலவீனமான சமிக்ஞை முறைக்குப் பதிலாக மிகவும் உயர் தரத்திலான டிஜிட்டல் (Digital) காட்சிகளை பார்வையிடுவதற்கு உள்ள சந்தர்ப்பம் அதாவது பல தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒரே என்டனாவில் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அனைத்து உள்நாட்டு அலைவரிசைகளையும் ஒரே தரத்தில் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் மற்றும் அதிக தெளிவுடன் (High Definition - HD) தொலைக்காட்சியை பார்வையிடும் அனுபவத்தை நேயர்கள் அடைந்துகொள்கின்றனர்.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ஜப்பான் யென் மில்.17,717 ஆகும். (JICA நிறுவனத்தின் பங்களிப்புப் பெறுமதி ஜப்பான் யென் மில். 13,717 உம் அரசாங்க பங்களிப்பு ஜப்பான் யென் மில். 3,505 ஆகும்.)

2021.07.15 ஆம் திகதி இந்தக் கருத்திட்டத்தின் அடிப்படை நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்கிணங்க கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு நிறுவப்பட்டது. உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், தொழில்நுட்ப ஆலோசனை சேவை மற்றும் கருத்திட்ட ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2014.06.05 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட ஆளணிப் பதவிகள் 27 இல் 02 தவிர ஏனைய பதவிகள் 25 க்கும் ஆட்சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2021.08.23 ஆம் திகதி அந்த திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பது 05 பேரைக் கொண்ட ஆளணிக்கு மாத்திரமாகும். அதற்கிணங்க, தற்போது நான்கு பேரைக் கொண்ட ஆளணி மூலம் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த ஆளணி போதாமையினால் மீண்டும் 26 பேரைக் கொண்ட ஆளணியை அனுமதித்துக்கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(i) அதற்கான தொழில்நுட்ப ஆலோசனை உதவி ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனால் பெறுகை நடைமுறைக்கு அமைய, கருத்திட்ட ஆலோசகர் ஒருவரை தெரிவுசெய்துகொள்வதற்காக அரச நிதித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவொன்றின் மூலம் விலைமனுக்களை கோருவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, முன்மொழிவுகளை கோருதல் (Request for Proposals) 2021.12.27 ஆம் திகதி முடிவடைகின்றது. தொழில்நுட்ப மதிப்பீடு (Technical Evaluation) மற்றும் நிதி மதிப்பீடு (Financial Evaluation) 2022 ஆம்

ஆண்டின் முதல் காலாண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் அளவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

(ii) கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக இந்த அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிதி அமைச்சு, தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர்களின் மற்றும் JICA நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வகையில் செயற்பாட்டுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(iii) DBNO சட்டத்தை தயாரிப்பதற்காக ஏற்புடைய குழுவை நியமிப்பது தொடர்பில் மற்றும் அது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், முன்மொழிவுகள் மற்றும் சிபாரிசுகளை உள்ளடக்கிய வகையில் அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(iv) ஒளிபரப்பு நிலையங்கள் 16 ஐ நிறுவுவதற்காக முன்மொழியப்பட்டுள்ளதோடு அதற்காக காணிகளை சுவீகரிக்கும் பணிகளை 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(v) 2021.12.17 ஆம் திகதி முதல் 2028.12.17 ஆம் திகதி வரை கருத்திட்டக் காலப் பகுதியை நீடிப்பதற்காக வேண்டி நிதி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக JICA நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(vi) தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் இந்தக் கருத்திட்டத்திற்குத் தேவையான அதிர்வெண்களை ஒதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(vii) உத்தியோகபூர்வமாக கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்புடைய வைபவம் 2021.12.28 ஆம் திகதி டாஜ் சமுத்திர ஹோட்டலில் நடைப்பெற்றது. அதன் போது அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் இந்தக் கருத்திட்டத்தின் செயற்பாடு தொடர்பில் அறிவூட்டப்பட்டது.

(viii) இந்தக் கருத்திட்டம் "விசேட கருத்திட்டம்" (Special Project) ஆக கௌரவ நிதி அமைச்சரால் 2021.10.05 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

(ix) 2021 ஆம் ஆண்டுக்காக ரூ.மில். 8.0 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. செலவு ரூ.மில். 6.948 ஆகும்.

ix) பௌதீக வெளியைப் பயன்படுத்துவது தொடர்பில் புதிய பிரவேசம் (ஏழாவது பகுதி)

புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை முன்னுரிமைப்படுத்தல்.

அமைச்சின் மின்சாரப் பட்டியலை பூச்சியப் பட்டியலாக மாற்றியமைப்பதற்காக புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி உருவாக்கத்திற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சூரிய வலுச்சக்தியை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய மின்சாரத் தொகுதியுடன் இணைப்பதற்கு (National Grid) எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை ஊக்கப்படுத்துவது அமைச்சின் எதிர்ப்பார்ப்பாகும். இலங்கை ஒலிபரப்புக்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான குச்சவெளியில் அமைந்துள்ள காணியில் சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக அரசாங்க பங்குடமை ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

(x) ஊழல் அற்ற வினைத்திறன்மிக்கதொரு நிர்வாகம் (இரண்டாம் பகுதி) – அரசாங்க தொழில்முயற்சி முகாமைத்துவக் கொள்கை

போட்டிமிக்க வியாபாரத் துறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க தொழில் முயற்சிகள் அந்தந்த துறைகளில் நடைமுறைப்படுத்தப்படும் தனியார் தொழில் முயற்சிகளுடன் போட்டியிடும் அரசாங்க தொழில் முயற்சிகளுக்கு விசேட அரசாங்க அனுசரணையை வழங்குவதன் மூலம் சந்தையின் சாதாரண செயற்பாட்டுக்கு தடை ஏற்படாத வண்ணம் நடவடிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனம் ஆகியவற்றை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைப்பதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, சாத்தியவளத்துடன்கூடிய வியாபாரத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. வருமான இலக்குகளை அடைந்துகொள்வதற்காக தொடர்ச்சியான பின்னூட்டங்கள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் செய்யப்படுகின்றன. வருமானத்தை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் செலவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு அடிக்கடி நிதிப் பகுப்பாய்வொன்றை மேற்கொள்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் லேக்ஹவுஸ் நிறுவனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு இலாபமீட்டும் நிறுவனங்களாக மாறும் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பன சமநிலைப் புள்ளியை (Break-even Point) நெருங்குமெனவும் அமைச்சு எதிர்ப்பார்க்கின்றது.

2.1.4 பொதுத் திறைசேரியின் மானியங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்.

அரசாங்கத்தினால் மூலதனச் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் நிறுவனங்களினால் திட்டமிடப்பட்ட இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாதுள்ளது.

2.1.4.1 சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு

வசந்தம் டிவி அலைவரிசை இந்த நாட்டு தமிழ் பேசும் இலங்கை வாழ் மக்களுக்கு தெளிவான காட்சிகளை கண்டுகளிப்பதற்காக மற்றும் உள்நாட்டு தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதற்கும் ஏற்ற வகையில் மேம்படுத்தும் இரண்டுவருட கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூமில். 304 ஆகும். 2021 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து ரூ.மில். 250 நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றதோடு செலவு ரூ.மில். 40.11 ஆகும். பெறுகை

நடவடிக்கைகள் நிறைவுபெறாத காரணத்தினால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை.

2.4.4.2 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

2021 ஆம் ஆண்டுக்கான மூலதன நிதி ஒதுக்கீடு ரூ.மில். 100 ஆக இருந்தது. முற்பணம் கிடைப்பதற்கு தாமதித்த காரணத்தினால் யட்டியன்தோட்டை ஒலிபரப்பு நிலையத்தின் மின்பிரப்பாக்கி இயந்திரம், கரகஹதென்ன ஒலிபரப்பு நிலையத்திற்கான புதிய என்டெனா கேபல் மற்றும் பிரதான அலுவலகத்திற்கான 800A பலகையை மாத்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூ.மில். 42 செலவிடப்பட்டுள்ளது.

2.1.4.3 தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகளில் 1000 இல் 521 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

சுவிற்சலாந்து அரசின் நிதியுதவியின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு தகவல் அறியும் உரிமையை ஊக்குவிக்கும் கருத்திட்டத்தின் கீழ் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் பங்கேற்புடன் பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண மட்டத்தில் 03 ஆலோசனை மற்றும் மேன்முறையீடுகளை விசாரிக்கும் செயலமர்வுகள் 02 உம் நடாத்தப்பட்டன. UNDP நிதி உதவியின் கீழ் மேன்முறையீட்டு செயற்பாட்டுக்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் (Web-based Tracking System) கருத்திட்டத்தையும் USAID நிதியுதவியின் கீழ் தகவல் சட்டத்தின் கீழ் பொது அதிகாரசபைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை கருத்திட்டம் நிறைவடைந்துள்ளது.

2021 ஆம் வருடத்திற்கு ஆணைக்குழுவுக்கு மூலதன நிதி ஒதுக்கீடாக ரூபா.மில். 2.97 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செலவு ரூ.மில். 2.66 ஆகும்.

2.1.4.4 இலங்கை பத்திரிகைப் பேரவை

இலங்கைப் பத்திரிகைப் பேரவையினால் 186 பத்திரிகைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அத்தோடு பத்திரிகைகள் தொடர்பான முறைப்பாடுகளும் விசாரணை செய்யப்படுகின்றன. உயர் தரம் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியைப் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு Zoom செயலமர்வுகள் 09 நடாத்தப்பட்டுள்ளது. மேலும், பிரதேச ஊடகவியலாளர்களுக்கான 06 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

பத்திரிகைக் கலை தொடர்பான டிப்ளோமா பாடநெறி (IX குழு) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் உத்தியோகபூர்வ You Tube அலைவரிசை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்காக மூலதன நிதி ஒதுக்கீடாக ரூ.மில். 3.82 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, கணினி மற்றும் உதிரிப் பாகங்கள், அலுவலக தளபாடங்கள் மற்றும் நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை 2.731 மில்லியன் ரூபாவாகும்.

2.1.4.5 இலங்கை மன்ற நிறுவனம்

2021 ஆம் ஆண்டில் மூலதன நிதி ஒதுக்கீடாக ரூபா மில்லியன் 100 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, முற்பணமாக கிடைக்கப்பெற்ற ரூபா.மில். 42.17 தொகை நிறுவனத்தின் கட்டிட பழுதுபார்ப்புக்காகவும் நிலத்தின் மறுசீரமைப்புக்காகவும் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் செலவிடப்பட்டுள்ளது.

2.2 சவால்கள்

2.2.1 நட்டத்தில் இயங்கும் ஊடக நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்

தனியார் ஒளிபரப்பு அலைவரிசைகள், அச்சு ஊடகங்களைப் போலன்றி கலாசாரத்தைப் பாதுகாத்து அத்தோடு பண்பாட்டையும் பாதுகாத்த வண்ணம் செயற்படவேண்டியது அரசாங்க ஊடக நிறுவனங்களின் பொறுப்பாகும். ஆயினும், தற்போது போட்டிமிக்க சூழலில் தரத்திற்குப் பதிலாக முறையற்ற ஒளிபரப்பு வகைப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் ஒளபரப்பு அலைவரிசைகளுக்கு விளம்பரங்களை வழங்குவதன் மூலம் மீண்டுவரும் செலவினங்களை தீர்த்துக்கொள்வதற்கேனும் அரசாங்க ஊடக நிறுவனங்கள் உழைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. தேசிய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை தயாரித்தல் மற்றும் போட்டிமிக்க நிகழச்சிகளை தயாரித்தல் என்பன ஒன்றுக்கொன்று முரணான விடயங்களாகும். இந்த நிறுவனங்கள் நட்டமடைவதற்கு பிரதான காரணம் தாங்க முடியாத மேந்தலைச் செலவினமாகும். இவ்வாறான நிறுவனங்கள் ஆகக் குறைந்தது நடு நிலமையைப் பேணுவதற்கு அல்லது மீள்கட்டமைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2.2.2 இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக எண்ணியல் (Digital) தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தொடர்முறை (Analog) தொழில்நுட்பத்திற்குப் பதிலாக உலகின் பல நாடுகள் புதிய தொழில்நுட்ப நிலமையின் கீழ் விருத்தி செய்யப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பத்தை தொலைக்காட்சித் துறையிலும் அறிமுகம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். விசேடமாக தொடர்முறை தொழில்நுட்பம் மறைந்து செல்வதினால் அந்த தொழில்நுட்பத்தின் மீதான ஒளிபரப்பு உபகரணங்கள் எதிர்காலத்தில் பராமரிப்பது பிரச்சினைக்குரியது. இந்தக் கருத்திட்டத்திற்குத் தேவையான ஆளணியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் 2028 ஆம் ஆண்டின் இலக்கிடப்பட்ட வேலைத்திட்டங்கள் நிறைவுசெய்வதற்கு தனியார் ஊடக நிறுவனங்களை தொடர்புபடுத்திக்கொள்வதும் சவால் மிக்கது.

2.2.3 ஊடகவியலாளர்களின் தொழில்வான்மையை மேம்படுத்தல்

தற்காலத்தில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாத்திரங்களில் மிகவும் சக்திமிக்க மற்றும் தீர்க்கமான காரணியாக ஊடகம் மாறியுள்ளது. மக்களுக்கு தகவல்களை அடையச் செய்யும் பொருட்டு வெகுசன ஊடகத்துறை நேர்முறையான பங்களிப்பை வழங்குகின்றது. அதன் மூலம் நல்லாட்சியை கொண்டு செல்வல முடியும்.

இலங்கையில் சனநாயகத்தைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் போது சுதந்திரமான, சுயாதீனமான மற்றும் மக்கள் நேயமிக்க ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவது அவசியமாகும். இந்தப் பணிக்காக நல்லாட்சி பற்றிய செயன்முறையை நல்லாட்சியையும், சனநாயகத்தையும் வலுப்படுத்துவதில் ஊடக தரப்புக்க பாரிய பங்கு உண்டு. நாட்டில் காணப்படும் பல்லின மற்றும் திறந்த ஊடக கலாசாரத்தை நிறுவும் பொருட்டு தொழில்மறை ரீதியில் வலுவான ஊடக சமூகமொன்று காணப்படுதல் வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்கும் நிறுவனமொன்றை நிறுவும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஊடகங்கள் சமூகங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியிருப்பதனால் உயர் ஊடக தரங்களைப் பேணி வருவதை உறுதி செய்யும் வகையில் ஏற்புடைய ஊடக ஒழுக்க விழுமியங்களுக்கு ஏற்ப தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்குவதன் மூலம் சிறந்த ஊடகப் பாவனையின் உச்சத்தை அடைந்துகொள்வதற்கு சமூகப் பொறுப்பை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமொன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் சர்வதேச போக்குகள் காரணமாக வெகுசன ஊடக துறையில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவ்வாறான மாற்றங்களை செய்யும் போது தொழில் அபிவிருத்தி, திறன் விருத்தி மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக தொடர்ச்சியான கல்வி நிறுவனமொன்றை நிறுவுவது அத்தியவசியமாகும். அதற்கிணங்க உத்தேச ஊடக நிறுவனத்தை நிறுவுவது கட்டாய அவசியமாகும்.

2.2.4 பக்கச்சார்பு அற்ற தரமுறையொன்றை அறிமுகம் செய்தல்.

ஒலிபரப்பு மற்றும் விளம்பர பிரச்சாரத்தின் போது ஒலிபரப்பு தரங்கள் தீர்க்கமான காரணியாக மாறியுள்ளது. ஒலிபரப்பு நிலையங்களின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் போது உள்ளடக்கத்தைக்கூட சவாலுக்கு உட்படுத்தக்கூடிய பொருளாதார அறிவாற்றல் சம்மற்ற வீதத்தில் கட்டுப்படுத்தும் ஆற்றல் தரப்படுத்தும் தரவுகளுக்கு உண்டு. அரசாங்க வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் மாத்திரம் இருந்த காலப்பகுதியில் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. 1992 ஆம் ஆண்டில் ஒளிபரப்பு துறையின் எல்லைகளை தளர்த்தப்பட்ட பின்னர் தனியார் நிறுவனங்களுக்கு இடம் வழங்கிய பின்னர் தரப்படுத்தல் முறை ஆரம்பமானது. விளம்பரகாரர்களினால் தரப்படுத்தல் விரிவாக பயன்படுத்தப்பட்ட போதிலும் சில ஒளிபரப்பு நிறுவனங்கள் இந்த முறைதொடர்பில் திருப்தியுடன் இல்லை. எனவே, இந்த அமைச்சினால் பக்கச்சார்பற்ற தரப்படுத்தல் முறையொன்று அறிமுகம் செய்யப்படுதல் வேண்டும்.

2.2.5 ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை அறிமுகம் செய்தல்.

தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் நிகழும் மாற்றங்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது தற்காலத்தில் காணப்படும் பொறிமுறையில் உள்ள ஒழுங்கீனம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காணப்படும் சிக்கல் தன்மை அவ்வாறே எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஊடகங்களின் நடத்தையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பினரையும் வழிநடாத்துவதற்கு சுயாதீன நிறுவனமொன்று இருத்தல் வேண்டும் என அவதானிப்புச் செய்யப்படுகின்றது.

2.2.6 அரசாங்க ஊடக நிறுவனங்களின் தொழில்நுட்ப பதவிகளுக்கு புதியவர்களைக் கவர்தல்.

2.2.7 அரசாங்க ஊடக நிறுவனங்களை நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு வலுவூட்டல்.

2.2.8 வானொலியை டிஜிட்டல் மயமாக்கல்.

2.3 எதிர்கால இலக்குகள்

i. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பெறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ள ஊடக கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்துதல்களை நடைமுறைப்படுத்தல்.

ii. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் தகவல் அறியும் வழியை விரிவுபடுத்தல்.

iii. ஊடகவியலாளர்களை அறிவு மற்றும் அனுபவத்தால் வலுப்படுத்தல்.

iv. ஊடக அறிவை மேம்படுத்தல்

v. ஊடக ஒழுக்கவிழுமிய முறைமையொன்றை அறிமுகம் செய்தல்

.....

செயலாளர்

வெகுசன ஊடக அமைச்சு

වී.පී.කේ. අනුජ පැල්පිට
ලේකම්
ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
163, ''ඇසිඳිසි මැදුර'', කිරුළපන මාවත,
පොල්හේන්ගොඩ, කොළඹ-05.

அத்தியாயம் 03

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ -எப்

2021 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

வரவு செலவுத் திட்டம் (2021)		குறிப்பு	உண்மையான 2021 ரூ.	உண்மையான 2020 ரூ	
	- **வருமான பெறுகைகள்**		-	-	
	- வருமான வரி	1	438,470,000	158,527,000	
	- உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	2	438,470,000	158,527,000	
	- சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	ஏசீஏ-1
	- வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
	- **மொத்த வருமான பெறுகைகள்(அ)**		438,470,000	158,527,000	
	- **வருமானமல்லாத பெறுகைகள்**				
	- திறைசேரி முற்பணம்		284,805,000	112,298,000	**ஏசீஏ -3**
	- வைப்புகள்		9,097,783	539,082	**ஏசீஏ -4**
	- முற்பணக் கணக்குகள்		9,690,713	8,529,222	**ஏசீஏ -5**
	- வேறு பெறுகைகள்				
	- **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)**		**303,593,495**	**121,366,304**	
	- **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள்இ = (அ)+(ஆ)**		**742,063,495**	**279,893,304**	
	திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)		245,577,254	13,017,818	
	தேறிய வருமானம் மற்றும் வருமானம் அல்லாத வருமதிகள் உ=(இ)-(ஈ)		496,486,241	266,875,486	
	கழி: செலவினம்				
	- மீண்டெழும் செலவினம்				
	- வேதனம், சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள்	5	106,988,179	133,896,967	
	- ஏனைய பெருட்கள் மற்றும் சேவைகள்	6	64,046,145	68,353,317	**ஏசீஏ**-2(ii)
	- மானியங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் மாற்றல்	7	974,030,871	1,166,553,637	
	- வட்டிக்கொடுப்பனவுகள்	8			
	- ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்	9			
	மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஈ)		**1,145,065,195**	**1,368,803,921**	

மூலதனச் செலவுகள்				
மூலதனச்சொத்துக்கள் மேம்பாடும் புனரமைப்பும்	10	103,649,866	7,539,965	ஏசீஏ-2(ii)
மூலதனச் சொத்துக்கள்கையகப்படுத்தல்	11	55,807,519	8,026,931	
மூலதன மாற்றல்கள்	12	65,781,566	312,548,784	
நிதி மாற்றல்களை கையகப்படுத்தல்	13		-	
திறன் விருத்தி	14	6,613,239	2,670,606	
ஏனைய மூலதனச் செலவுகள்	15	162,604,308	48,245,192	
மொத்த மூலதனச் செலவுகள் (உ)		**394,456,498**	**379,031,479**	
வைப்புக் கொடுப்பனவுகள்		1,068,714	742,459	ஏசிஏ-4
முற்பணக் கொடுப்பனவுகள்		8,469,376	25,087,125	ஏசீஏ-5
வேறு பிரதான பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவுகள்				
பிரதான பேரேட்டு செலவினம் (ஊ)		**9,538,089**	**25,829,584**	
மொத்தச்செலவினம்எ=(ஈ+உ+ஊ)		1,549,059,783	1,773,664,983	
2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பண மீதி ஏ=(இ-எ)		(1,052,573,541)	(1,506,789,498)	
முற்பண இணக்க கூற்றுக்கு அமைய மீதி		(1,052,573,541)	(1,506,789,498)	ஏசிஏ-7
டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முற்பண மீதி				ஏசிஏ-3

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ-பி

2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலமைக் கூற்று

	குறிப்பு	2021	2020
		ரூபா	ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	ஏசீஏ-6	403,168,644	8,677,962
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5(அ)	15,336,566	16,557,903
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		4,771,962
மொத்த சொத்துக்கள்		**418,505,210**	**30,007,827**
மொத்த சொத்துக்கள்			
நிகர சொத்து / பங்கு			
திறைசேரிக்கு நிகர சொத்துக்கள்		7,295,351	16,545,757
சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு		403,168,644	8,677,962
வாடகை, பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ-5(ஆ)	-	-
நடைமுறை பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசீஏ-4	8,041,215	12,146
முற்பண மீதி	ஏசீஏ-3		4,771,962
மொத்த பொறுப்புக்கள்		**418,505,210**	**30,007,827**

மேலே உள்ள ஏ.சி.ஏ வடிவத்தில் எண் 1 முதல் 7 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 7 முதல் 61 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் 62 முதல் 70 வரையான பக்கங்களில் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்.இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன்மூலம் சான்றளிக்கிறோம்.

நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக நிர்வாகக் கட்டமைப்பொன்று நிறுவனத்திற்குள் காணப்படுவதோடு, நிதிக் கட்டுப்பாட்டுக்காக உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியின் பயனுறுதியை மேற்பார்வை செய்வதற்கும், அதற்கிணங்க அந்தத் தொகுதியை பயனுள்ள

வகையில் செயற்படுத்துவதற்குத் தேவையான வகையில் மாற்றியமைப்பதற்கும் அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

.....

பிரதான கணக்கீட்டு அலுவலர்
செயலாளர்
வெகுசன ஊடக அமைச்சு

வீ.பீ.கே. අනුජ පැල්පිට
ලේකම්
ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
163, ''ඇසිඳිසි මැදුර'', කිරුළපන මාවත,
පොල්හේන්ගොඩ, කොළඹ-05.

.....

பிரதான நிதி அலுவலர்

ඒ. ඩී. පුෂ්පා කුමාරි
ප්‍රධාන මූල්‍ය නිලධාරී
ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
2022.03.23
අංක: 163, කිරුළපන මාවත
පොල්හේන්ගොඩ,
කොළඹ 05.

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ-சீ

2021 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	2021	2020
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாயச்சல்		
மொத்த வரி பெறுகைகள்	438,470,000	22,230,000
கட்டனம்,அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்		-
இலாபம்		-
வருமானமல்லாத பெறுகைகள்		-
ஏனைய தலைப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம்	48,622,901	1,850,504
திறைசேரி முற்பணம்	284,805,000	112,298,000
முற்பணங்களை அறவிடுதல்	8,982,498	3,930,086
வைப்பு வருமதிகள்	9,097,783	539,082
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)	**789,978,181**	**140,847,672**
கழி - காசு செலவிடல்:		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	338,726,827	90,570,614
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	37,365,871	14,289,790
பிறசெலவின தலைப்புகளுக்கான செலவினம்	1,123,107	10,017,348
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம்	245,577,254	13,271,962
முற்பணக் கொடுப்பனவு	8,032,886	1,996,662
வைப்புக் கொடுப்பனவு	1,068,714	742,459
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**631,894,658**	**130,888,836**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**158,083,523**	**9,958,836**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு		
வட்டி	-	
பங்கிலாபம்	-	
சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை	-	
கடன் அறவீடுகள்	-	
முற்பண அறவீடுகள்		
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு(ஈ)		

கழி - காசு செலவிடல்		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம்	158,083,523	10,212,980
வேறு முதலீடுகளை கையகப்படுத்தல்		
முதலீட்டு செயற்பாட்டுக்காகசெலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**158,083,523**	**10,212,980**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(ஊ)=(ஈ)-(உ)	**(158,083,523)**	**(10,212,980)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு(எ)=(இ) + (ஊ)		**(254,144)**
நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டு கடன்பெறுகை	-	
வெளிநாட்டு கடன்பெறுகை	-	
கிடைத்த நன்கொடைகள்		
பெறப்பட்ட வைப்புக்கள்		
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)		
கழி - காசு செலவிடல்		
உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு		
வெளிநாட்டு கடன்பெறுகைமீள்கொடுப்பனவு		
வைப்புக் கொடுப்பனவுகள்		
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)		
நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)		
காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) –(ஒ)		**(254,144)**
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி		**254,144**
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி		**0**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடும் அடிப்படை

1. **அறிக்கையிடப்படும் காலப்பகுதி**

   2021 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்கான காலப்பகுதியாகும்.

2. **அளவீட்டின் அடிப்படை**

   நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் மீது தயாரிக்கப்பட்டுள்ளதோடு, சில சொத்துக்களின் வரலாற்றுச் செலவு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு விருத்தி செய்யப்பட்டுள்ளது. வேறு முறையில் குறிப்பிடப்படாதபோது கணக்குகளைத் தயாரிக்க விருத்தி செய்யப்பட்ட பணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
   நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

3. **வருமானங்களை இனம்காணல்**

   பரிமாற்றம் செய்யக்கூடிய மற்றும் பரிமாற்றம் செய்யமுடியாத வருமானங்கள் அவை பெறப்பட வேண்டிய காலப் பிரிவைக் கருத்திற்கொள்ளாது பணம் கிடைக்கப்பெறும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படும்.

4. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை இனம்காணல் மற்றும் அளவிடல்**

   சொத்துக்கு ஏற்புடைய எதிர்கால் பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் என்ற உறுதிப்பாடு உள்ளபோது மற்றும் அந்தச் சொத்துக்கள் சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என இனம்காணப்படும்.
   சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவுக்கு இனம்காணப்படுவதோடு செலவு மாதிரி ஏற்புடையதாகாத சந்தர்ப்பங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படும்.

5. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு**

   இந்த ஒதுக்கு கணக்கு சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு நேரொத்த கணக்காகும்.

6. **காசும் காசுக்கு சமமானவையும்**

   2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கையிலுள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைக் கொண்டு காசும் காசுக்கு சமமானவையும் கணக்கிடப்படும்.

7. **நிதிக் கூற்று மாதிரிப் படிவத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் கடந்த ஆண்டில் ஒப்புநோக்கப்பட்ட பெறுமதிகளை மீண்டும் செம்மையாக்கல்.**

   2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று மாதிரிப் படிவங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு அமைய 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்புநோக்கத்தக்க எண்ணிக்கைகளில் ஏற்புடைய செம்மையாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		ரூபா ,000 சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1002-13-00	இறக்குமதி செய்யப்பட் டெலி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கான வரி	695,000	695,000	438,470	63%

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா , 000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதிஒதுக்கீடு		
மீண்டுவரும்	308,016	1,177,611	1,145,065	97%
மூலதனம்	867,700	883,615	394,456	44%
மொத்தம்	1,175,716	2,061,226	1,539,521	75%

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா, 000

தொடர் இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.	பட்டதாரி பயிலுநர்களுக்கான கொடுப்பனவு	80	80	80	100%

02	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளை ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடுதல்	1043	1043	1043	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றகை

ரூபா , 000

